MUNICIPAL COUNCIL
JAFFNA.

## சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும்!

யாழ். ஆஸ்பத்திரி சமாதான வலய

# பேச்சு நடத்த புலிகள் நிபந்தனை

யாழ். வைத்தியசாலைப் பிரதேசத்தை சமாதானப் பிராந்தியமாக பிரகடனப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் மத்தியஸ்தம் வகித்து பேச்சுவார்த்தையையும், அதன் தீர்வுகளையும் ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதற்காகச் செயற்பட வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்துள்ளார்கள். அத்துடன் வவுனியா பௌத்த பீடாதிபதியும், வண. பிதா யோகான் தேவானந்தா போன்ற மதப் பிரதிநிதிகளும், அரச வைத்திய அதிகாரிகள் சங்க தலைவரும், செயலாளரும் இம்மத்தியஸ்தத்தில் இடம்பெற்று பேச்சுவார்த்தைகள் ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடைமுறைப் பத்டுத முன்வரும் பட்சத்திலேயே தாம் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக உள்ளதாகவும் விடுதலைப்புலிகள் நேற்றிரவு அறிவித்தார்கள். இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:- யாழ் போதனா வைத்தியசாலை மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வந்த சிறிலங்கா அரசு, அதனை மூடும் கொடூரச் செயலைச் செய்ய முடிவு செய்தது. எமது வரலாற்றில் யாழ். வைத்தியசாலை எல்லைகளை உள்ளடக்கிய பகுதிகளிலிருந்து நாம் ஒருபோதும் கோட்டை இராணுவ முகாம்மீது தாக்குதல்களை மேற்கொண்டது கிடையாது. இருந்தபோதிலும் ஆஸ்பத்திரி மீது தாக்குதலை நடாத்திய அரசு, அதன் உச்சக் கட்டமாக அதனை மூடும் உத்தரவையும் பிறப்பித்தது. இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற மக்கள் போராட்டங்களும், சர்வதேச நெருக்கடிகளும் அரசின் உத்தரவை மறு பரிசிலனை செய்ய வைத்துள்ளதுடன், எம்முடன் (6 ஆம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 1-25
REGISTERED AS A NEWSPAPER

# முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

முரசு 1 ஒலி 164 செவ்வாய் 12-05-1987 (சித்திரை 29) ரம்ழான் 13

★ இரண்டு பொம்பர்கள், இரண்டு ஹெலிகப்டர்கள், ஒரு சீபிளேன்

# யாழ்நகரில் திடீர் தாக்குதல்

# பொதுமக்களில் ஐவர் மரணம்

## பதுங்குகுழிகளால் பலர் உயிர் தப்பினர்

(முரசொலி அலுவலக நிருபர்கள் குழு)

யாழ்நகரின் பல பகுதிகளிலும் நேற்று மாலை இரண்டு பொம்பர் விமானங்களும், இரண்டு ஹெலிகப்டர்களும், ஒரு சீபிளேனும் சமகால திடீர்த்தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன் சுமார் பத்துப்பேர் படுகாயமடைந்துள்ளார்கள். பல வீடுகளும், கடைகளும் இத்தாக்குதல்களின் போது பலத்த சேதமடைந்தன.

மாலை சுமார் நான்கு மணியளவில் நகரப் பகுதிக்கு வந்த இரண்டுபொம்பர்களும் சுமார் அரைமணி நேரமாக பல பகுதிகளிலும் மாறிமாறி தாக்குதல்களை மேற்கொண்டன. பொம்பர்களுக்கு உதவியாக ஹெலிகாப்டர்களும் சுற்றிச் சுற்றி வந்து ரொக்கட் மோட்டார் தாக்குதல்களையும், "பிப்டி கலிபர்" தாக்குதல்களையும் மேற்கொண்டன. இதேவேளையில் கோட்டை முகாமிலிருந்தும் 'ஷெல்' தாக்குதல்கள் நகரப்பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டன.

யாழ்நகர் மானிப்பாய் வீதியில் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் பொம்பரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் வண்ணை சிவன் மேற்கு வீதியில் மூன்று பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றொருவர் அதிர்ச்சியால் மரணமானார். முஸ்லிம்கள் உட்பட பலர் படுகாயமடைந்தனர். இப்பகுதியிலுள்ள சுமார் நான்கு வீடுகள் பாரிய

— 6 ஆம் பக்கம் பார்க்க

ஜே. வி. பியினரால் நேற்று பட்டப்பகலில்

# திவுலுப்பிட்டி வங்கி கொள்ளை!

## சூடுபட்டு ஒருவர் பலி; மனேஜர் படுகாயம்

வடமேல் மாகாணத்திலுள்ள திவுலுப்பிட்டிய மக்கள் வங்கிப் பணம், நகை என்பன நேற்றுக்காலை ஹைஏஸ் வான் ஒன்றில் வந்த எட்டு ஆயுதம் தாங்கிய பொலிஸ் சீருடை அணிந்த நபர்களினால் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த எட்டுப் பேரும் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் வங்கியினுள் திடீரென புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து கருமபீடத்தில் இருந்த பணம், நகைஎன்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றனர். துப்பாக்கிப் பிரயோகத்தினால் வங்கிப் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டார். வங்கியின் முகாமையாளர் சூட்டுக் காயத்துடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தையடுத்துக்

... 6 ஆம் பக்கம் பார்க்க

# ராணுவத்தில் ஊடுருவியிருந்த 120ஜே.வி.பி.உறுப்பினர்கைது

இலங்கை ராணுவ சேவையில் ஊடுருவியிருந்த சுமார் நூற்றியிருபது ஜே. வி. பி. உறுப்பினர்கள் ராணுவ உயர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி, கடுகண்ணாவைப் பகுதிகளில்ஜே. வி. பி. யைச் சேர்ந்த எட்டு யுவதிகள் கைதானதையடுத்தே குறிப்பிட்ட ராணுவச் சிப்பாய்கள் கைதானதாகத்தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு வருட காலத்துக்குள்ளேயே இவர்கள் அனைவரும் ராணுவத்தில் சேர்ந்ததாகவும், முதல் ஆறுமாத காலம் முகாம்களில் இவர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏறக்தாழ ஐநூறு வரையிலான ஜே. வி. பி. உறுப்

— 6 ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதி விடுத்துள்ள உத்தரவு:

# போராளிகள் அரண்கள்மீது விமானத்தாக்கு தொடரும்!

யாழ். குடா நாட்டிலுள்ள இராணுவ முகாம்களுக்கு அருகேயுள்ள போராளிகளின் சகல காவல் அரண்கள் மீதும் விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தன முப்படைகளின்தும் கூட்டுத் தளபதி சிறில் ரணதுங்காவுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. தேசிய பந்தோபஸ்து அமைச்சில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்புச்சபைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்உத்தரவைப் பிறப்பித்

— 6 ஆம் பக்கம் பார்க்க

# இறுதித்தீர்வை இந்தியா அறிவிக்கும் என்கிறார் ராஜீவ்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு இலங்கை அரசும், தமிழ்த் தீவிரவாதிகளும் மீண்டும் பேச்சுக்களை தொடங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்று இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல அடிப்படையான இறுதித் தீர்வை இந்தியா தெரிவிக்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

## மரணமானவர்கள் விபரம்

நகரில் நேற்று பொம்பர் விமானங்கள் குண்டுகள் வீசி கொல்லப்பட்டவர்கள் ஐவரில் ஒரு முஸ்லிம் வயோதிபர் குண்டு வீச்சின் அதிர்ச்சியினால் மரணமானார். மரணமானவர்களின் விபரம் வருமாறு:- செல்லையா (50 வயது) கொழும்புத்துறை; வள்ளியம்மை (45 வயது); சிவா (20 வயது) மானிப்பாய்; எஸ். எம். எம். மொகைதீன் (80வயது) சிவன் பண்ணை றோட்; ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் அடையாளம் காணமுடி

— 6 ஆம் பக்கம் பார்க்க

# 194 பிறமாவட்ட ஆசிரியர் யாழ். பகுதிக்கு இடமாற்றம்

பிறமாவட்டங்களில் இருந்து நூற்றித்தொண்ணூற்றி நான்கு ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் இடமாற்றப் பட்டியல் நேற்று யாழ். கல்விப்பணிப் பாளர் எம். எம். மன்சூரினால் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப் பட்டது.

இந்த ஆசிரியர்களுக்கு யாழ்.மாவட்டத்தில் வட்டார ரீதியில் பாடசாலைகளை பிரித்துக் கொடுக்கும் வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இடமாற்

... 6 ஆம் பக்கம் பார்க்க

## பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர்களின் கவனத்திற்கு

சகல மாணவர்களும் 14-5-1987 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எமது தலைமை அலுவலகத்தில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

05033


## பாலர் கல்வி கருத்தரங்கு

பாலர் கல்விக்கழகத்தின் ஆதரவில் இடம்பெறும் பௌர்ணமி தினக் கருத்தரங்குத் தொடரில் நான்காவது கருத்தரங்கு நாளை 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் கழகத்தலைவர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், தொலைக்கல்வி நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு. எம். எஸ். அலெக்ஸ்சாண்டர் விரிவுரையும், களப்பயிற்சியும் நடத்துவார்.


## சவூதி அரேபியா பிரயாண ஒழுங்கு
### (HOSPITAL CLEANERS)
### வைத்தியசாலைச் சுத்திகரிப்பாளர்

சவூதி அரேபியாவிற்கு குறுகிய காலத் தவணையில் இலவச உணவு, இருப்பிட வசதியுடன் 450 S. R. சம்பளத்தில் வைத்தியசாலைச் சுத்திகரிப்பாளராகச் செல்ல விரும்புவோர் 15 ந் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பு பாஸ்போர்ட், 6 படங்களுடன் நேரில் வரவும்.

✶ தற்பொழுது நோன்புப் பெருநாள் நடைபெறுவதால் சகல சவூதி அரேபியா அரசுத் தூதுவராலயங்களும் இம் மாதம் 27 ந் திகதியுடன் விடுமுறைக்காக மூடப்பட விருப்பதால், சகலருக்கும் இம் மாதம் 22 ந் திகதிக்கு முன் பிரயாணம் செய்ய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

முகவரி:

**K. M. வைத்தீஸ்வரன்**
கச்சாய் வீதி,
கொடிகாமம்

05025



சுதந்திரச் சிறுவிளம்பரம்

### ஏல விற்பனை

இம் மாதம் 22-ம், 23-ம், 24-ம் திகதிகளில் பகல் 9 மணியளவிலிருந்து ஏராளமான பொருட்கள் கோப்பாய் பொதுச்சந்தையில் (சந்திக்கருகாமையில்) ஏலத்தில் விற்பனையாகும். பொருட்களை இப்பொழுதே பார்வையிடலாம். பொருட்களின் முழுவிபரங்களுக்கும் முத்திரைககவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட், கோப்பாய். 05030



★ குவைத் ★ சவூதி
★ ஓமான் ★ டோகா

ஆகியவற்றுக்கான

## பிரயாண ஒழுங்குகள்

கடந்தவாரம் எமது முகவர் நிலையத்தினூல் பயணம் மேற்கொண்டோரைத் தொடர்ந்து இவ்வாரம் 9-5-87 சனிக்கிழமை அன்று பயணம் மேற்கொண்டோர் பெயர் விபரம் பின்வருமாறு:-

1. வைரவி முருகேசு அரியநாயகம், இல. 22, திருமகள் வீதி, அரியாலை மேற்கு.
2. அரியகுட்டி பரமலிங்கம் ஆவரங்கால் தெற்கு, புத்தூர்.
3. செல்லையா யோகராஜா, காளிகோவிலடி, பத்தமேனி, அச்சுவேலி.
4. சரவணமுத்து ஜெயமோகன், காளிகோவிலடி, பத்தமேனி, அச்சுவேலி.
5. சங்கரப்பிள்ளை சிறிநாதன், யாழ் வீதி, வசாவிளான்.

குறிப்பு: (1). வைத்தியலிங்கம் சுப்பிரமணியம், (2). சுப்பையா மகேந்திரன், (3). செல்லப்பா சுதாகரன், (4) ராஜேந்திரம் யோகநாதன், (5) கனகசபை மகேந்திரன், (6) சுப்பிமணியம் சிவானந்தராஜா. மேற் குறிப்பிட்ட ஆறுபேரும் உடன் எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

❁ சவூதி ❁ குவைத் ❁ ஓமான் ❁ டோகா

ஆகிய நாடுகளுக்கான வெற்றிடங்கள் அதிகளவில் இருப்பதால் உடன் 16 புகைப்படம், பாஸ்போட்டுடனும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நாம் மத்திய கிழக்கு நாடுகட்கான பிரயாண ஒழுங்குகள் மட்டுமே மேற்கொள்கிறோம். உங்களின் கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் செய்துதரப்படும். எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ளலாம்.

எம்மிடம் கடிதமூலம் தொடர்புகொள்வோர் முத்திரைக்கவருடன் தொடர்பு கொள்ளவும்.

**A. பத்மதாஸ்**
மதுரா வீடியோ கிளப்,
இல. 96, 4ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23549

05028



# முரசொலி கேடயத்துக்காக
## ஜோனியன்ஸ் ஸ்போர்ட்ஸ்கிளப் நடத்தும்
### 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான
# இரிக்கெட் போட்டி

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்
இம் மாதம் 13ஆம் 14ஆம் திகதிகளில்
தினமும் காலை 8-30 மணி முதல் நடைபெறும்

### பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்கள்

- ❁ கிரஸ் ஹொப்பர்ஸ் (வெள்ளை)
- ❁ யாழ். ஜோனியன்ஸ் (கறுப்பு)
- ❁ ஜொலி ஸ்டார்ஸ்
- ❁ ஜொலி ஸ்டார்ஸ் (பொன்)
- ❁ ஜங் சென்றலைட்ஸ்
- ❁ ஓல்ட் கோட்ஸ்
- ❁ றேஞ்சர்ஸ்
- ❁ ஜங் பற்றீசியன்ஸ் "ஏ"
- ❁ கொக்குவில் மத்திய வி. கழகம் (சிவப்பு)
- ❁ யாழ். ஜோனியன்ஸ் (சிவப்பு)
- ❁ சென்றலைட்ஸ்
- ❁ ஜங் பற்றீசியன்ஸ் "பீ"
- ❁ கொக்குவில் மத்திய வி. கழகம் (மஞ்சள்)
- ❁ ஸ்கந்தா வி. கழகம்
- ❁ கிரஸ் ஹொப்பர்ஸ் (பச்சை)
- ❁ கிறீன்லைன் வி. கழகம்
- ❁ ஜொலி ஸ்டார்ஸ் (நீலம்)
- ❁ கனகரட்ணம் ம. ம. வி.

பிரவேசக் கட்டணம் ரூபா 5/- மட்டுமே!



## பிரயாணத்திற்கு தயாராகுங்கள்

★ London
★ Norway ★ Germany
★ France ★ Canada

DOHA - QATAR ( Open Visa)

1. Labourers – 450 Q.R
2. Carpenters – 700 Q.R
3. Masons – 700 Q.R
4. Painters – 750 Q.R

நோர்வே செல்வதற்கு துரித கதியில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

SINGAPORE
1. Labourers (Building Construction & Shipyard)
2. House Maids

# GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ - மானிப்பாய்
❁ எமக்கு வேறு கிளைகள் கிடையாது.

05026

## நலவாக்கு

எல்லா மக்களையும் சிறிது நாளைக்கும், சில மக்களை எல்லா நாளைக்கும் முட்டாளாக்க முடியும். ஆனால் எல்லாரையும் எல்லா நாளும் முட்டாளாக்க முடியாது.

— லிங்கன்

ஆர். ஜி. பில்டிங், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

# இதயநாதம்

## 'உணவுப் பஞ்சம்' என்பது அரசின் மற்றொரு தடை

யாழ்ப்பாண மக்கள் மீது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்ச்சியான 'தடை' நடவடிக்கைகளின் வரிசையில் அடுத்ததாக அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத் தடை ஏற்படுத்தப்படவுள்ளது.

கடந்த சிலநாட்களாக அரசாங்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இது தொடர்பாக மேற்கொண்டுவரும் திட்டமிட்ட "அட்வான்ஸ் பப்ளிஸிட்டி", யானைவரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்ற பழமொழியை நினைவுபடுத்துகின்றது.

'கடல் வலயம்' என்ற புதுவகைச் சட்டத்தின் மூலம், மீன்பிடிப்பதற்குக் கொண்டுவரப்பட்ட தடையை அடுத்து, யாழ்ப்பாணத்தின் மீதான அரசின் உத்தியோகபூர்வமான தடைகள் ஆரம்பமாகின.

இதனையடுத்து ராணுவ, கடற்படை முகாம்களுக்கு அருகிலிருந்த தனியார் வீடுகள் உடைக்கப்பட்டு, குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளில் வசிப்பதற்கு "பாதுகாப்பு ஒழுங்கு" என்ற பெயரில் தடை விதிக்கப்பட்டது.

அடுத்து பலாலி, வசாவிளான், வல்வெட்டித்துறை' பருத்தித்துறை முகாம்களை அண்டிய விவசாயக்காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு, ஏழை விவசாயிகள் விவசாயம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது.

இதற்கிடையே வாகனங்களை வீதிகளில் ஓடுவதைத் தடைசெய்வதற்காக பர்மிட் முறை அமுலுக்கு வந்ததாயினும் அது பிசுபிசுத்துப் போய்விட்டது.

இரண்டு சில்லு சைக்கிள்களுக்கும்கூட கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது.

இத்திட்டத்தின் மற்றோர் அங்கமாக பழுதடைந்த, சேதமுற்ற வீதிகளைத் திருத்தம் செய்வதற்கும் இங்கு தடை விதிக்கப்பட்டது.

இவைகள் தோல்வியடைய நேர்ந்ததால், எரிபொருள் தடையை அரசாங்கம் இவ் வருடத்தின் முதல் நாளே அமுலுக்குக் கொண்டு வந்தது.

இதனையடுத்து தொலைதொடர்புத் தடையும், அடுத்து உள்ளூர் தொலைபேசித் தடையும் செயற்படுத்தப்பட்டன.

இதற்கிடையே யாழ்ப்பாண மக்களின் அன்றாட தேவைக்கான பல பொருட்கள் ஏற்றி வரப்பட்ட லொறிகள் ராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டன.

சைக்கிள் உதிரிப்பாகங்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள், அத்தியாவசிய மருந்துவகைகள் முகாம்களிலுள்ள ராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் மீதான பொருளாதாரத்தடையை படிப்படியாக அமுலாக்கி வரும் ஜெயவர்த்தன அரசு, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை இம் மாதம் எட்டாம் திகதியுடன் மூடி விட நடவடிக்கை எடுத்தது.

உலக நாடுகளின் கண்டனமும், யாழ்ப்பாண மக்களின் எதிர்ப்பும் ஏகோபித்த வேளையில் உருவானதால், அந்த நடவடிக்கையை அரசு தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ளது.

அதற்கும் கூட சில நிபந்தனைகளை விதித்து, விடுதலைப் போராளிகளை 'தக்கு' வைத்தே அரசு தனது விளையாட்டைக் காட்டியுள்ளது.

இவ்வாறான ஒரு நெருக்கடி நிலையைத் தனக்கு சாதகமாக உருவாக்கி, இங்குள்ள மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் கிடைக்காமல் செய்ய இப்போது அரசு பகிரதப் பிரயத்தனம் மேற் கொண்டுள்ளது.

காங்கேசன்துறைக்கு வந்த இரண்டு உணவுக் கப்பல்கள் ஏற்றி இறக்கத் தொழிலாளர்கள் இல்லை என்றகாரணத்தால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

ஏற்கனவே துறைமுகத்துக்கு வேலைக்குச்சென்றபல ஊழியர்கள் ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டதால் ஊழியர் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கமோ, ஊழியர்களை பயங்கரவாதிகள் வேலைக்குச் செல்லவிடாது தடுத்துள்ளதால் உணவுப்பஞ்சம் ஏற்படலாமென்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏதாவது ஒரு சாட்டைக்கூறி யாழ்ப்பாண மக்களுக்கு நேரடியாக உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதை இச்சந்தர்ப்பத்தில் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் மீது அரசு அடுத்தடுத்து விதித்து வரும் 'தடை' களில், இது உச்சக் கட்டத் தடையாகும்.

றெனி - லலித் மோதல் | நேற்றைய தொடர்ச்சி

# அரசியல் உயர் ஸ்தானத்துக்கு சகல யோக்கியதைகளும் றெனி டி மெல்லிடமே உண்டு!

"சிலோன் டெய்லி நியூஸ்" போன்ற ஒருதலைப் பட்சமான, பரிதாபகரமான பாரபட்சப் புதினப் பத்திரிகைகள் லலித்தின் முயற்சிகளுக்கு வெற்றியுண்டாகுக என வாழ்த்தின. "லலித்திடம் அம்னெஸ்ரி படுதோல்வி" போன்ற அந்நாளிதழ்களின் மலைப்பூட்டும் தலைப்புச் செய்திகள் இவ் எத்தனங்களுக்குத் தூபமிட்டன. மேலும் விசித்திரம் என்னவென்றால், வாசகர்கோடிகளைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் இத்தன்மையான தலைப்புகளைத் தொடர்ந்து, அப் பத்திரிகைகள் தரும் செய்தி அறிக்கைகள் கூட இத் தலைப்புகள் கூறுவனவற்றைச் சற்றேனும் நிருபிப்பது கிடையாது. எனவே, திரு. அத்துலத் முதலியின் கருத்தும், கரிசனையும், நல்லொழுக்கம் அல்லது நற்பண்புகளை அனுசரிப்பதற்குப் பதிலாக, பிரசாரத்தில் ஈடுபடுதல் ஆகும்.

தாராள ஜனநாயகத்தினதும், தாராள விழுமியங்களினதும் இன்றைய பரம வைரியாகத் திரு. அத்துலத்முதலியைக் குறிப்பிட்டு இருந்தோம். ஒரு பொறுப்பு உணர்வு அற்ற வெறும் குற்றச்சாட்டின் உருவிலோ, ஒரு தனி ஆளின் நடத்தையைக் கடுமையாக சாடும் வகையிற் தானுமோ, நாம் இதனைக் குறிப்பிடவில்லை. தாராள சிந்தனையாளர் ஆகிய நாம், என்றாவது இப்படியாகத் தனி நபர்களைக் கண்டித்துத் தாக்கியதில்லை. திரு. அத்துலத் முதலியின் அரசியல் நடவடிக்கைகளைப் பல ஆண்டுகளாக அவதானித்தமையின் பயனாகவே இக் கசப்பான உண்மையை நாம் முழுமையாக நம்பும்படியாக்கப்பட்டு உள்ளோம்.

"அபிவிருத்தியின் பொருட்டான சர்வாதிகாரம் எனும் போலிவாதத் தோற்றம்" என்று நாம் அழைத்துள்ளதில் திரு. அத்துலத்முதலி நம்பிக்கை பூண்டவர். இதனையிட்டு எவ்வித ஐயமும் இருக்க முடியாது. உண்மையில், தனியாட்களுடன் சம்பாஷணையில் மாத்திரமன்றி, பகிரங்க மேடைப் பேச்சுக்களிலும் கூட, மரபுவழி வந்துள்ள பாராளுமன்றப் பண்புகள்பால் தாம் கொண்டுள்ள உதாசீனத்தை, ஏளனத்தை, திரு. அத்துலத் முதலி தெளிவாக்கியுள்ளார்.

(இப் பருவ வெளியீட்டிற்கு முந்திய இதழில் விஷயதானம் செய்தவர் ஒருவர், பாராளுமன்ற உறுப்பினரின் மனச்சாட்சிச் சுதந்திரம் பற்றி அவர் கொண்டுள்ள அபிப்பிராயத்தை வலுவுற விளக்கிக் காண்பித்துள்ளார்).

நவீன ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றம் பற்றிய கருத்தேற்பு என்ன? இடப்பட்ட பணிப்பின்படி வெறுமனே சட்டம்ஆக்குவதே அம் மன்றத்தின்பணியாகும். அமைச்சரவைகேட்கும் அப்படியான சட்டங்களை மாத்திரம் நாடாளுமன்றம் ஆக்குதல் வேண்டும். அபிவிருத்தியை அமுலாக்குதற்கு என இருக்கும் அந்தந்த உள்ளூர் முகவர்களாகவே பா. உ. க்கள் செயற்படுதல் வேண்டும். அது தவிர நாட்டின் ஆட்சிமுறை நற்பண்பு வாய்ந்ததா, நல்லொழுக்கமானதா, அல்லவா எனத் தீர்மானிக்கும் உரிமையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடையவர்கள் அல்லர். இத்தகைய அபிப்பிராயத்தைத் தான் திரு. அத்துலத்முதலி உடையவர் என அறியப்படுகிறது.

திரு. அத்துலத் முதலி மனப்பூர்வமாக அதிகாரம் பாலிப்பவர்தானும் அல்லர். அவ்வாறு அவர் பாலிப்பவர் என வைத்துக்கொள்ளக் காரணம் எதுவும் இல்லை. தாம் ஜனரஞ்சகமானவர் ஆதற்கு அவர் ஆர்வத்துடன்கையாளும் கீழ்த்தர "ஜிமிக்கிகள்" இதற்குச் சான்றுபகரும். தமது ஆளுமையைப் பிரசாரம் செய்ய தமது படங்களையுடைய சுவரொட்டிகளை அவர் அச்சடித்து வெளியிடுகிறார். பளபளக்கும் வெள்ளிநிற மேலட்டை கொண்ட நூல்களாக அவர் தமது வாழ்க்கை வரலாற்றை பிரசுரிக்கிறார். அவற்றுக்குப் "புனிதம்" என பெயரிடுகிறார். அவர் மகாபொல லொத்தரை தமது ஆளுக்கே உரிய ஒரு முயற்சியாக விளம்பரப்படுத்த முயல்கிறார். "தஹம் பாசல" பௌத்த சமய சிறுவர் போதனா வகுப்புகளில் பயபக்தியுடன் பௌத்தமுதுமொழிகளை அவர் உச்சரிக்கிறார். இங்ஙனமாக அதிகார பாலனம் எனும் மிக வசதியான மார்க்கத்தைப் பயன்படுத்தி தமது கட்சியின் அரசியல் முறைமையின் ஆதிக்கத்தை திரு. அத்துலத்முதலி நிலைபெறச் செய்கிறார் போலும்.

அத்துலத் முதலி போன்ற ஒருவர், தமது போக்கிற்கு மிகப் பிரதிகூலமான ஒரு பேர்வழியாகத் திரு. றெனி டி மெல்லின் கண்களிற் படுவது வியப்பல்ல. ஏனெனில் இன்றைய இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்களில் திரு. டிமெல்தான் மிகத் திறந்த மனத்தினர், சகிப்புத் தன்மை மிக்கவர்; நாகரிக நற்பண்புகள் வாய்க்கப் பெற்றவர். அறிவாற்றல் துறையில் திரு. அத்துலத் முதலி சிக்கெனப் பிடித்திருப்பது நிழலை; திரு. டி மெல் அதன் நிஜ தன்மையை முழுமையாக ஈட்டிக் கொண்டுள்ளார்.

இன்றைய ஐ. தே. க. இலங்கை அரசின் முன்னணிப் பிரமுகர்களுள் தனியொருவராகிய திரு. றெனி டி மெல்லையே உளப் பூர்வமான, ஆர்வம் நிரம்பிய பாராளுமன்ற ஆட்சி முறை ஆதரவாளராகக் கணிக்கிறோம். உயர் நிலையினராக அரசாங்க பதவி வகித்தற்கு உன்னத யோக்கியதை உடைய பரந்த, முதிர்ந்ததொலை நோக்குடைய சோஷலிச ஜனநாயகவாதி அவர் ஒருவரே.

வெற்றிகரமான ஓர் அரசியல்வாதி ஆதற்கு, பரந்த, திறந்த தூரதிருஷ்டி அவசியம், அத்தகையஒருவருக்குவரலாறு அல்லது இலக்கியம்அல்லது தத்துவ ஞான அறிவு இன்றியமையாதது. இவைபற்றிய அறிவு அற்றவர் அப்படியான தொழிலை நோக்குடையவராதலோ வெற்றிகரமான ஓர் அரசியல்வாதியாதலோ இயலாது. இவ்வண்ணம் "த லிபெறல் றிவியூ"வின் ஒக்டோபர்-டிசெம்பர் 1986 இதழில் ஓர் எழுத்தாளர் எழுதியுள்ளார். அவர் வெற்றி எனக் குறிப்பிட்டது சந்தர்ப்பவாத பதவி நோக்கங்களை மனதிற் கொண்டு அல்ல. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆக்கபூர்வமான பங்கு நல்குதலையே அக் கட்டுரையாளர் கருத்திற் கொண்டிருந்தார்.

இத் துறைகளில் எல்லாம் திரு. றெனி டி மெல்லின் அறிவு வினாவிற்கு உட்படுத்தப்பட முடியாதது. அவரை முக்கிய ஓர் உறுப்பினராகக் கொண்ட இவ்வரசாங்கமோ அரசியல் சகிப்புத் தன்மையின்மைக்குப் பெயர் பெற்றது. இப்பேர்ப்பட்ட ஓர் அரசாங்கத்தில திரு. மெல் ஏதோ ஒருவாறாகத் தமது சகிப்புப்பண்பைப்பேணி வந்துள்ளார். அரசியற் கட்சி வகையில் அவரது கட்சியினர் அனைவரும் ஒரேசீராக இயங்கக் கடப்பாடு உடையோராவர். அத்தகைய ஒரு கட்சியில் அவர் தனது தனித்துவத்தைப் பங்கம் அடையவிடாது காப்பாற்றி வந்துள்ளார். நற்பண்போ நாகரிகமோ அற்றோரைக் கொண்டமைந்த ஓர் அமைச்சரவையில் திரு. றெனி டி மெல் தமது கலாசாரம், கல்விஞானம், எங்கும் எதிலும் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளும் உயர் பண்புகளை எங்ஙனமோ ஒருவாறாகப் பேணிவந்து உள்ளார். இவையனைத்தும் எவ்வகையிலும் அற்பசொற்ப சாதனைகளே அல்ல.

எவ்வாறாயினும், இவ்வண்ணம் கூறிச் செல்வதனால், திரு. டி மெல் குறைகள் அற்ற ஒருவர் என உணர்த்த முனையும் உத்தேசம் எமக்கு இல்லை. அவரது தலைவர்களும் சகாக்களுமோ சகிப்புத் தன்மை இல்லாதவர்கள், அரசியல் சூத்திரதாரிகள்.

இது திரு. டிமெல்லுக்கு உவப்பானதல்ல என்பது தெளிவு. இப்பேர்ப்பட்ட ஒருவர் இவ்வளவு காலமாகத் திறைசேரி அமைச்சுப் பீடத்தின் கண் அமர்ந்திருப்பது சில வகைகளில் திருப்திகரமானதல்ல. ஏற்றுக் கொள்ளத் தகுந்தது அல்லாத எத்தனையோ கருமங்களில் (குறைந்த பட்சம்பொது மக்கள் கண்ணிற்படும் அளவிற்காவது) மௌனமாக ஒத்திசைவுடன் நடந்து கொண்டமையும் மனநிறைவு தருவதாக இல்லை.

இன்னும் ஒன்றையும் நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்: தற்போது திரு. உபாலி விஜேவர்த்தன எம் மத்தியில் இல்லை. அண்மையில் ஆள்வகையில் அடிக்கடி மிக வன்மமாக திரு. டி மெல் இவரைச் சாடியுள்ளார். அதனைவிடச் சமீப காலத்தில், 'அத்த' (உண்மை) எனும் பத்திரிகைக்கு எதிராகவும், "த ஐலண்ட்" (திரு. உபாலி விஜேவர்த்தனவின் ஒரு நிறுவனம்) நாளிதழுக்கு எதிராகவும் திரு. டி மெல் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார். திரு. றெனி டிமெல் போலும் சிறந்த பண்புகள் அமையப் பெற்ற ஒருவருக்கு இவை யெல்லாம் அழகல்ல.

அமைச்சரவையையும் இலங்கையின் தற்போதைய ஐ. தே. க. அரசாங்கத்தையும் விட்டு விலகாது அவற்றுள் இருந்த வண்ணமே, குறுகிய காலப போக்கில் தமது நாட்டுக்குச் சிறந்த சேவை ஆற்ற

... 4 ஆம் பக்கம் பார்க்க

## கதிகலங்கும் வேளையிது காத்து நீ அருளாயோ!

உடுவில் பதியமர்ந்த உமையவளே மீனாட்சி
கொடுவினைகள் களைந்திடவே கருணை பொழிந்திடுவாய்
தொடுவடமே பற்றிரதம்தொடர்ந்தே இழுத்திடுவோம்
படுந்துயரை பார்த்திருந்து பரையே காத்திடுவாய்!

புதிய இரதமேறி பெட்புடனே வந்திடுவாய்
நிமலனைய உன்கருணை நயம் வேண்டி வழுத்துகிறோம்
விதிநினைந்து கலங்குகிறோம் விரைவில் வந்து எம்மை
கதிகலங்கும் வேளையிது காத்து நீ அருளாயோ!

மீனாட்சியுமை தாயே மாதாவே மண்டியிட்டோம்
நீயாட்சி செயும்காலை நின்றிடாதோ துயரெல்லாம்
தாயாட்சி அம்மா நீ தாரணியில் துயர் தீர
கோலாட்சி வந்தே உன்கோலவுரு காட்டிடுவாய்!

(உடுவில் ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் புதிய சித்திரத் தேர் உற்சவம் இன்று 12ம் திகதி நடைபெறுகிறது.)

❀ கொ. மு. சி. ஸ்ரீதயாளன்

### அரசியல்...

...3 ஆம் பக்கத் தொடர்ச்சி

லாம் எனத் திரு. ரெனி டி மெல் உணர்ந்திருக்கலாம். இது, அவரது இச் சிந்தனையோட்டம் ஒரு வேளை சரியான தாகவும் அமையலாம். ஏன் எனில், நிதி அமைச்சராகஅவர் உளளபடியாக ஒப்பாரும் மிக்காரும் அற்ற வகையில் சேவை ஆற்றியுள்ளார். எவர் மனதிலும் இது மிகஆழமாகப் பதிந்திருக்கும் என்பதனை நாம் நிச்சயம்ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

இருந்தாலும், நீண்ட காலப் போக்கில், "தாந்தா முன் செய்த வினை தாமே அனுபவிக்"கும்நாளொன்றைத் திரு. ரெனி டிமெல் சந்திக்கவேண்டி வரத்தான்போகிறது.காரணம் இவரது உறுதியான, ஆழ்ந்த அரசியல் நம்பிக்கைகள், திரு. லலித் அத்துலத்முதலியின் விருப்புகளைவிட எவ்வளவோ தொலைவில் இருப்பன. நாம் இங்கு பலமுறையும் திருஷ்டாந்த பூர்வமாக எடுத்து இயம்பியபடி, பெரும்பாலும் போற்றத் தகுந்த ரெனியின் போக்கும் தன்மையும், லலித் மிக விரும்புவனவற்றுக்கு நேர் மாறானவை.

பொதுவாக, எமது இலங்கைப் பத்திரிகைகள பொல்லாங்குகள் பற்றிய உண்மையை அறிந்தறிந்தும், அவற்றோடு ஒத்தூதுவன. ஆட்சி பீடம் அமர்ந்துளளோர் எத்துணைப் பொல்லாப்புப் புரிந்தாலும், அவர்களின் அடிவருடிகளாக இச்சகம் பேசிச் செயலாற்றுவன. பாராளுமன்றத்தின் தத்துவம் அல்லது அதிகாரத்தினது தனிமுதல் ஆதிக்கத் தன்மை வலுக் குறைந்துள்ளது. குடியியல் உரிமைகள் பறிப்பு விதிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பொதுத் தேர்தல்களுக்குப்பதிலாகவும், பிற பல தேசியமுக்கியத்துவம்வாய்ந்த சந்தர்ப்பங்களிலும் சர்வஜன வாக்கெடுப்பு புகுத்தப்பட்டுள்ளது. இது ஒரு முக்கிய தீங்கு ஆகும். ஜனநாயக ஆட்சிமுறையில் பல்வேறுபட்ட கருத்துக்களுக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால் இலங்கைத்தீவில் அச்சுதந்திரம் தேய்ந்து வருகின்றமைக்கு இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. அரசியற் பன்மை அபிப்பிராய சுதந்திரம் இங்ஙனம் அருகிச்செல்கின்றமை தமக்கு உவப்பாகப் படவில்லை என்பதைத் திரு. ரெனி டி மெல் என்றும், எப்பொழுதும், ஒழித்து மறைத்து வைத்திருந்தது கிடையாது.

இலங்கையின் சமகால அரசாட்சியில் முக்கிய(நிதி அமைச்சர்)பதவி வகித்தவண்ணம் அவ்வரசாங்கத்தினுள் தொடர்ந்தும் இருக்கும் திரு. ரெனி டி மெல், அவ்வரசின் மட்டுப்பாடுகளுக்கு அமைந்து ஒழுகவேண்டியவர் ஆகிறார். இம்மட்டுப்பாட்டு எல்லைகளுள் நின்றவண்ணமே தமது மனதுக்கும் மனச் சான்றுக்கும் சரியானவை எனப் பட்டவற்றை வெட்டவெளிச்சமாக அவ்வப்போது அவர்எடுத்து வெளியிட்டுள்ளார். தற்போதைய அரசியலமைப்பின் ஆட்சி ஆதிக்கக் கொள்கையுடைய புதுமுறைகளுக்கு வெளிப்படையாக வெறுப்புத் தெரிவித்துள்ள அவர், இலங்கைப் பாராளுமன்றம் அதன் முன்னைய தன்னிலைக்கு மீட்டெடுக்கப்பட வேண்டும் என மாத்திரம் அல்லாது, தமிழரின் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினையானது இணக்கஉரையாடல்கள் வாயிலாக சுய ஆதிக்க அடிப்படையில் தீர்த்துவைக்கப்பெறுதல் வேண்டும் எனவும்கூட நியாயம் கோரி வாதிட்டுவந்துள்ளார். இவை அன்றியும், அமைச்சரவையினுள் சர்வஜன வாக்கெடுப்பைத் திட்டவட்டமாக எதிர்த்து நின்ற ஒரேயொரு உறுப்பினருமாவார் என இப்பொழுது தெளிவாகியுள்ளது.

திரு. ரெனி டி மெல் இக் கருமங்கள் எல்லாவற்றையுமிட்டுக் கொண்டிருந்த இம்மன நிலைப்பாடுகள் பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டு இருந்தால் அதனை நாம் மிகவிரும்பியிருப்போம் என்பது மெய்யே. ஆயினும், இவ் அதிமுக்கிய விடயங்கள் அவருடைய மனப்பான்மை பாராட்டுக்குஉரியது என்பதும் அதேயளவு உண்மைதான். ஆட்சியாதிக்கச் சூத்திரதாரிகள்குழாத்தின் முன்னணியில் என்றும் இருந்துவந்துள்ள பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியின் மனப்பான்மைக்கு ரெனியின் உளச்சார்பு முற்றும் மாறான நிலைவகிக்கிறது.

நம் நாட்டு நெருக்கடி, முதற்கண் ஓர் அரசியல் நெருக்கடியாகும். இந் நெருக்கடியானது என்றும் மேன்மேலும் ஆழமாகிச் செல்லச் செல்ல, (நிதி அமைச்சர், பந்தோபஸ்து அமைச்சர் ஆகிய) முதன்மை நிலை வகிக்கும் இவ்வமைச்சர்கள் இருவரதும் பாத்திரங்கள் என்றுமே முனைப்பு அடைந்து வரும். இதுகாறும் திரு. ரெனி டிமெல் வகித்துள்ள ஆக்கபூர்வமான பாத்திரம் மகத்தானது. அதனை நாம் கணமேனும் குறைத்து மதிப்பிடுதற்கு ஒருப்படமாட்டோம். ஆனாலும் முன்னொருகாலத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அதன் படுமோசமான கட்டத்தில் இருக்கையில் அதனைத் துறந்து வெளியேறிய அவரைப் போன்ற ஒரு மனிதருக்கு, அரசியல் வகையில் ஆக்கபூர்வமாக "ஆலிலை நீர் போலத்" தொழிற்படுதற்கு மேலும் இடம் இருத்தல் வேண்டும்.

### ஆனைக்கோட்டை கருத்தரங்கில் மயூரன் பேச்சு

# சகலரும் ஆயுதபயிற்சிபெற்று போராடத் தயாராக வேண்டும்

(ஆனைக்கோட்டை)

இலங்கையில் இரண்டாவது இடத்தை வகிக்கின்ற யாழ். வைத்தியசாலையை மூடுவதானது மக்கள் பற்றிய தீர்வுக்கு மாற்றுத்திட்டமில்லாத கண்மூடித்தனமான முரட்டுப் போக்காகும். பாஸிச அராஜகத்தின் கொடியவனென வர்ணிக்கப்பட்ட கிட்லரிடம் காணமுடியாத கொடுமையான நடவடிக்கையை இந்த பேரினவாத அரசு மேற்கொண்டு வருகின்றது. யானையைக் கொல்வதற்கும், மற்றும் கொடிய மிருகங்களைக் கொல்வதற்கும் தடை விதித்துள்ள அரசு தமிழ் மக்களைக் கொல்வதின் மூலம் சிங்களமக்களைத் திருப்திப்படுத்த முயல்கிறது.

இவ்வாறு ஆனைக்கோட்டை உயரப் புலத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரை நிகழ்த்திய மானிப்பாய் பிரதேச விடுதலைப்புலிகள் அமைப்பாளர் திரு. மயூரன் குறிப்பிட்டார்.

திரு. த. அந்தோனிப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மயூரன் தொடர்ந்து உரையாற்றும் போது:

"தொடர்ந்தும் நாம், எமது பாரம்பரியப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டுமென்றால் சகலரும் ஆயுதப்பயிற்சி பெற்றே ஆக வேண்டும். போராடவும் தயாராக வேண்டும்."

"அகிம்சைவழிபபோராட்ட வரலாறு தமிழ்மக்களின் குரல்வளையைக் கடித்துக் குதறிய பின்னாலேதான் ஆயுதப் போராட்டமே சரியென மக்கள் உணர்ந்தனர். களனி மாநாடு, பண்டா – செல்வா ஒப்பந்தம், கண்டியாத்திரை எல்லாம் அகிம்சை கண்ட வரலாறுகள். ஆகஸ்ட் கலவரமும் இதன் உச்சம். தமிழ் – சிங்கள மக்களை ஒரே நீதியின் பார்வையில் பாதுகாக்கவேண்டிய தலைவர் பேசிய பேச்சு, 'போரென்றால் போர், சமாதானமென்றால் சமாதானம்' இந்தப் பேச்சே ஆயுதபோராட்டதை கூர்மையடையச் செய்தது."

"இந்தியா ஒரு சோஷலிஸ நாடல்ல, ஆயினும், சர்வதேச ரீதியில், தந்திரோபாய முறையிலேயே நாம் இந்தியாவை அணுகின்றோம். பேச்சுவார்த்தையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. நாலு அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால், பேச்சுவார்த்தைக்கு நாம் தயார். திம்புப் பேச்சுவார்த்தையை மனங்கொண்டே இதைக் குறிப்பிடுகிறேன்" என்றார்.

பங்குத் தந்தை வண. பிதா பி. எம். இம்மானுவேல் அடிகள் உரையின்போது, "தமிழன் தொடக்கத்தில் – வரலாற்று ரீதியாக இந்த நாட்டுக்கு உழைத்துக்கொடுத்துள்ளான். இன்று இந்த நாட்டை விட்டே துரத்தி அடிக்கப்படுகிறான். பிரபுக்களைவிட, ஒரு ஏழைப் பெண் கொடுத்த சிறு உதவி பெரிய உதவியாக கிறிஸ்துவால் கருதப்பட்டது போல சகலரும் எமது போராளிகளுக்கு உதவ வேண்டும்" என்றார். திரு. கி. துரைராசா, திரு. ஏ. வரதராசா ஆகியோரும் உரையாற்றினர்.

## 25வருடச் சேவை புரிந்த கூட்டுறவுஊழியர்கௌரவம்

கூட்டுறவுத்துறையில் 25வருடங்கள் சேவைசெய்த கூட்டுறவாளர்களை கௌரவிக்க ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ். மாவட்டக்குழு தீர்மானித்துள்ளது.

அண்மையில் மேற்படிசபையின் 15ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்றபோதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் முற்கூட்டியே சில பொருட்களைக் கொள்வனவு செய்து சங்கங்களுக்குவிநியோகிப்பதற்காக பொத்த களஞ்சியம் ஒன்றைஅமைப்பதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

### நீர்வேலி ப. நோ. கூட்டுறவுச் சங்கத்துக்கு

## விமானத் தாக்குதல்களால் ஆறுலட்சம் ரூபா நஷ்டம்

(உடுவில்)

வலி – கிழக்கு தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்மீது கடந்த மாதம் ஹெலிகப்டர் தாக்குதலினலும், மறுநாள் இடம்பெற்ற பொம்பர் தாக்குதலினலும் ஆறுலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சங்கத்தின் மேல்மாடிக் கட்டிடம், இருப்பு விற்பனை நிலையம், லொறி கராஜ் என்பனவற்றிற்கு ஐந்து லட்சத்திற்கு மேலும், தளபாடங்களுக்கு ஐம்பதினயிரம் ரூபாவும், பௌசர்உட்பட மூன்றுலொறிகளுக்கும் அறுபத்தையாயிரம் ரூபாவும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இச்சேதங்கள் யாவற்றையும் கடந்தசனிக்கிழமை அரசாங்க அதிபர் பார்வையிட்டார். இத் தாக்குதல் பற்றியும், இதனல் ஏற்பட்ட சேதங்கள் பற்றியும் ஜனதிபதி, அரசாங்க அதிபர், கூட்டுறவு அமைச்சர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டு இதற்குரிய நஷ்டஈட்டை வழங்குமாறு கோரியிருப்பதாக சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## நிவாரண உதவி

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை – புலோலிப் பகுதியில் பொம்பர், விமானத் தாக்குதலால் மரணமானேர்களின் குடும்பங்களுக்கு நாளை 13 ஆம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் வைத்து நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

புங்குடுதீவு மடத்துவெளி சனசமூக நிலைய ஆதரவில் 'ஜங் ஸ்ரார்' விளையாட்டுக் கழகம் இம்மாதம் 14ஆம் திகதி வியாழக்கிழமை மாபெரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியினை நடாத்தவிருக்கிறது.

அன்று மாலை திரு. மா. தனபாலன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாட்சர சண்முகதாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

### இன்று 9-வது நினைவுதினம்


## கதிரவேல் சுவாமிகள்

"குருபக்தியே பெரும்பேறு கொண்டாடிக் கொண்டாடி ஆறு"
"குருபரன் அருட் பணி ஆற்றுதல் இன்பம்"

இவ்விரண்டு நற்சிந்தனைகளையும் தன் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர் மாணிக்கம் கதிரவேற் சாமியார். யோகசுவாமிகளிடம் அவர் கொண்டிருந்த பயபக்தியும், அமைதியான நிலையும் அவர் தனது குருநாதரிடம் எவ்வளவு அன்பு கொண்டவர் என்பதை எடுத்துக் காட்டியது. முருக பக்தரான இவர் பிற மதங்களை மதிக்கும் தன்மை வாய்ந்தவராக விளங்கினர்.

சிறு வயதிலேயே சுற்றுடலில் நிறைந்திருந்த சிறுமைகள் எல்லாவற்றிலுமிருந்து நீங்கியவர் கொல்லாமை, கள்ளாமை, தாழ்மை, பொய்யுரையாமை போன்ற சீரிய ஒழுக்கங்களில் வழுவாது வாழ்ந்து வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இலைமறை காய் போல இருந்தவர் சாமியார். சுவைத்தவருக்கே பழத்தின் சுவை தெரியும். சாமியார் கதிரவேலுடன் பழகியவர்களுக்கே அவரின் பண்பு தெரியும். இறைவனிடம் சகலதையும் பொறுப்பளிப்பதே அவர் தம் வழி. திருநெல்வேலியில் அவதரித்த சுவாமிகள் இளமையிலிருந்தே விடாமுயற்சியுடன் வாழ்க்கையில் போராடி வறுமையை வென்று வளமாக வாழ்ந்து, மற்றவர்களுக்கும் பயனுடையவராகப், பலனை எதிர்பாராது கர்மயோகியாக வாழ்ந்து மறைந்தார்.

19. 4. 1910ல் பிறந்த இப் பெரியார் 69 ஆண்டுகள் வாழ்ந்து இறைவனின் திருவடி நிழலை அடைந்தார். "தோன்றிற் புகழொடு தோன்றுக", என்ற வாக்கியத்திற்கு அமைய



வாழ்ந்த மகான் கதிரவேல் சுவாமிகள். இவ்வாறு இம்மையிலும், மறுமையிலும் நற்பேறு பெற்ற மகான்களைக் காண்பதரிது. ஞாலத்தின் ஞானச்சுடராய் விளங்கிய சுவாமிகளின் நாமம் நமக்கெல்லாம் வழிகாட்டும்.

—ஜீவா

# பொசப் பொழுது

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டில் ஏற்பட்டுவரும் சதி நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கவென அரசாங்க தரப்பினரால் கோரப்பட்ட விவாதம், ஜெயவர்த்தன புர பாராளுமன்றத்தில் கோரமில்லாமல் இடைநடுவில் கைவிடப்பட நேர்ந்தது.

அரசாங்க தரப்பில் 140க்கும் மேலான அங்கத்தவர்கள் இருந்தும், அரசாங்கம் முன்மொழிந்த விவாதத்துக்கு இருபது பேர்கூட இல்லாததால் கோரமில்லாத நிலை ஏற்பட்டது.

கோரத்துக்கான மணி அடிக்கப்பட்ட போது, அரசாங்க தரப்பு எம். பீக்கள் பலர் வெளியேயிருந்து கதவு இடுக்கு வழியாக சபையைப் பார்த்து விட்டு மெதுவாக நழுவிவிட்டதாக அரசாங்க சார்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் பிரேரணையை கோரமில்லாமல் செய்ய அரசாங்க எம். பீக்கள் இப்படிச் செய்வது புதினமானதல்ல. ஆனால் அரசாங்க தரப்பு பிரேரணைக்கே அரசாங்க எம். பீக்கள் குழி பறித்தது எதற்காக?

அது பரம ரகஸியம்!

❀ உக்கிரன்

## செனட், பிரதிநிதிகள் சபை

# பிலிப்பைன்ஸில் தேர்தல்; நேற்று முதல் வாக்களிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் புதிய செனட், பிரதிநிதிகள் சபைக்கான பொதுத்தேர்தல் வாக்களிப்பு நேற்று தொடங்கியுள்ளது.

செனட்சபைக்கான 24 உறுப்பினர்களையும், பிரதிநிதிகள் சபைக்கு 200 உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்கென நடத்தப்படும் இந்தத் தேர்தலில் 2000த்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இரண்டு கோடியே அறுபது லட்சம் மக்கள் இந்தத்தேர்தலில் வாக்களிப்பார்கள் என பிலிப்பைன்ஸ் தேர்தல் பற்றிய கருத்துக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இருந்த அமெரிக்க அரசியல் முறையிலான இந்த இரு சபைகளும் 1972 ஆம் ஆண்டு மார்க்கோஸ் பிறப்பித்த இராணுவச் சட்டத்தையடுத்து நீக்கப்பட்டன.

இந்தத் தேர்தலில் லெபன் அணிக்கும் அக்கியூனோ ஆதரவு அணிக்கும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. என்ரீலே தலைமையில் இயங்கும் வலதுசாரி ஜனநாயக கூட்டமைப்புக்கும் இடையே வலுத்த போட்டி நடைபெறுகிறது. மார்க்கோஸ் ஆதரவு கே. வி. எல் பிரிவும் இடதுசாரி மக்கள் கட்சியும் தமது வேட்பாளர்களை தேர்தல் களத்தில் நிறுத்தி போட்டியிடுகின்றன. பிலிப்பைன்ஸின் இடதுசாரி கட்சி தேர்தலில் போட்டியிடுவது இதுதான் முதல்தடவை என கூறப்படுகிறது.

சென்ற ஆண்டு மார்க்கோஸிடமிருந்து ஜனாதிபதி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட திருமதி கொறாஸன் அக்கியூனோ இந்தப் பொதுத் தேர்தலில் முதன்முதலாக களத்தில் இறங்கியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் போது மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து ஜனநாயக உரிமைகளை மேலும் வழங்குவது என கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றும் நடவடிக்கையாகவே இத் தேர்தல் நடைபெறுவதாக கருத்துகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகளின்போது வன்முறைகள் இடம்பெறுதிருக்க பிலிப்பைன்ஸ் இராணுவம் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஈராக்குடன் இணங்குமாறு ஈரானுக்கு மேர்பி அழைப்பு

(பாக்தாத்)

மத்திய கிழக்கில் சமாதானத்தை உருவாக்குவதற்கு ஈடுபாடு காட்டும் ஈராக்குடன் ஈரானை ஒத்துழைக்குமாறு அமெரிக்க உள்நாட்டு அலுவல்கள் உதவிச் செயலாளர் திரு. றிச்சாட் மேர்பி கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்காசிய சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேர்பி பாக்தாத்தில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

ஈரான் - ஈராக் போரை முடிவுக்கு கொண்டுவரக்கூடிய புதிய முயற்சிகளை மேற்கொள்ள அமெரிக்கா உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஐக்கிய அரசுக் குடியரசுத் தலைவர் ஷேக்ஷையந்வலைகுடாயுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவதும் அரசு இஸ்ரேல் கெடுபிடியை முடிவுக்குக் கொண்டு வருவதும் அமெரிக்காவின் கையில்தான் இருக்கிறது என தெரிவித்துள்ளார்.

ஹோர்டுஸ் நீரிணைக்கூடாக வளைகுடா எண்ணெயை தடையின்றி எடுத்துச் செல்வதை உறுதி செய்வதன் மூலம் அமெரிக்கா சமாதானத்தை உறுதி செய்யும் என ஏற்கெனவே றீகனின் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## அரபுலீக் அமெரிக்காவிடம் கோரிக்கை:

# ஈரான், ஈராக் நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கக்கூடாது

(வாஷிங்டன்)

ஈரான், ஈராக் நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கக்கூடாது என அரபுலீக் அமெரிக்கத் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக வாஷிங்டனில் அரபுலீக் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறது. இந்த வேண்டுகோளை வாஷிங்டன் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு நாடுகளுக்கும் உலக நாடுகள் தடையை ஏற்படுத்துவதன் மூலம் சண்டையை ஒரு முடிவுக்கு கொண்டு வரலாம் என அரபு லீக் ஐ.நா. பாதுகாப்புக் குழுவைக் கேட்டுள்ளது.

# திருமுறை வெளியீடு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் திருநெறிய தெய்விக மகாநாட்டின் கடைசி நாளான நாளை 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிய தேவாரம் முதலாம் திருமுறை ஆதீனத்தால் வெளியிடப்படும்.

# இன்று காலை ரதோற்சவம்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். நாளை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் பின் விசேஷ பூசையும், அபிஷேகமும் நடைபெறும், நாளை பட்டுக்குடைத் திருவிழாவாகும். மாலை 4·30க்கு அவரோகணம் நடைபெறும்.

# நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

மழைகாலத்தில் வெள்ளத்தில் மிதக்கும் பண்டத்தரிப்பு சந்தைப் பிரதேசத்திற்கு வடிகால் அமைப்பதற்கு எழுபதினாயிரம் ரூபாவை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. எம். பஞ்சலிங்கம் பண்டத்தரிப்பு பட்டினசபை உப அலுவலகத்திற்கு யாழ்.மாவட்ட அபிவிருத்தி வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கியுள்ளார்.

# திருவிளக்கு பூஜைகள்

இன்று செவ்வாய்க்கிழமை ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ ஆலடி ஞானவைரவ சுவாமி கோவிலில் சித்திரா பூரணை விரதத்தை முன்னிட்டு திருவிளக்குப் பூஜைகள் நடைபெறும். நாளை புதன்கிழமை ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்திலும், நல்லூர் ஸ்ரீ வண்ணை வீரமாகாளிஅம்பாள்ஆலயத்திலும் திருவிளக்குப் பூஜைகள் நடைபெறும்.

# இன்றைய பலன்

**மேடம்:** பூமியால் யோகம், களஸ்திரசுகம். இல்லச் சிறப்பு, வெளியூர் செய்தியால் நன்மை, உத்தியோக உயர்வு.

**இடபம்:** உடன்பிறப்பால் நன்மை, இனசனவருகை, விருந்துபசாரம், வாகனப்பேறு, இலட்சுமிகடாட்சம்.

**மிதுனம்:** பிதாவழி நன்மை, தவறியபொருள் கைக்குவரும், செல்லுமிடமெல்லாம் காரியம் கைகூடும்.

**கடகம்:** மாங்கல்யத் தடை, வாகன நஷ்டம், மாதாவழிப் பகை, வெளிநாட்டுப்பிரயாணம் தடங்கல்.

**சிங்கம்:** சகோதர உதவி, மனைவிவழியால் பொருள் வரவு, புத்திரர் ஒருவருக்கு உடல் நலக்குறைவு.

**கன்னி:** வருமானம் உயரும், மாதர்வழியால் நன்மை, வாகனவிருத்தி, பெரியஇடத்து உதவி.

**துலாம்:** நம்பியவர் ஏமாற்றுவர், கைப்பொருள் நட்டம், கன்னியர் ஒருவரால் நன்மை, புத்திரர் ஒருவர்க்குத் தொழில் வாய்ப்பு.

**விருச்சிகம்:** வீண் விரயம், பெரியோர் பகை. நன்மை செய்தும் வீண்பழி கேட்பீர்கள், உள்வீட்டுப் பகையால் உபத்திரவம்.

**தனுசு:** லாபம் அதிகரிக்கும், மாதா வழியால் பணம்கிடைக்கும், தன தானிய விருத்தி.

**மகரம்:** தொழிற்பேறு, வணிகர்க்கு நன்மை, இலட்சுமி கடாட்சம், மாங்கல்யவிருத்தி.

**கும்பம்:** வரவு அதிகரிக்கும், வாகனாதிகளால் இலாபம் கிடைக்கும், மனையில் குதூகலம், மகப்பேறு.

**மீனம்:** உடல்நலக் குறைவு, வாகனக் கஷ்டம், வருவாயில் மந்தம், மங்கள காரியத்தடை.

★ யாழ் சோதிடர், ச. அரியநாயகம்

# நாளை தீப பூஜை

(உடுவில்)

ஒவ்வொரு மாத பூரணை தினங்களிலும் இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் தீபபூஜை நாளை 13ஆம் திகதி (புதன்கிழமை) நடைபெறும். சுமங்கலிப் பெண்களுக்கு கிருபை வேண்டி இப்பூஜை நடைபெறுகிறது.

# பாகிஸ்தானில் மாணவர் மோதல்

[இஸ்லாமாபாத்]

இஸ்லாமாபாத் பல்கலைக்கழக மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்தார். இதனால் பல்கலைக்கழகம் ஒன்று காலவரையறையின்றி மூடப்பட்டது. மாணவர் குழுக்களினால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களும், வெடிமருந்துகளும் பல்கலைக்கழக விடுதிகளிலும், மசூதியிலும் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


# தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்களும், பக்கம் கட்டுநர்களும் உடன் தேவை. அனுபவச் சான்றிதழ்களுடன் தபால்மூலம் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 10
C/o முரசொலி
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

05032

# பிரயாண ஒழுங்குகள்

**சவூதி:** மின்நிலையத்தில் கடமையாற்றுவதற்கு

| | |
|---|---|
| Electrical Engineer | 2500 S. R. |
| ,, Foreman | 1400 S. R. |
| ,, Technician | 1000 S. R. |
| Labourers - தொழிலாளர் | 600 S. R. |

பைப்பிற்றர், பிளம்பர், தச்சுவேலை, மேசன், சாரதிகள் உடன் ஒழுங்குசெய்து தரப்படும்.

ஆஸ்பத்திரி கிளினேர்ஸ் ஆண், பெண்களுக்கு வாய்ப்புண்டு.

**மாலைதீவு:** பெண் தொழிலாளர்களுக்கு உடன் ஒழுங்குசெய்து தரப்படும்.

**பஃறேன்:** ஓட்டோ எலக்ரீசியன் பிளம்பர்

**அபுதாபி:**

| | DRM | | DRM |
|---|---|---|---|
| தொழிலாளர் | 500 | கெல்ப்பர்கள் | 500 |
| பெயின்ரர் | 900 | மேசன் | 900 |
| தகரவேலை | 900 | தச்சுவேலை | 900 |
| மெக்கானிக் | 1000 | வெல்டர் | 900 |
| றிகர் | 1000 | பிற்றர் | 1100 |

★ நோர்வே ★ கனடா ★ U. K.

உடன் ஒழுங்குசெய்து தரப்படும்

விபரங்கட்கு:

**R. K. பரமசுவாமி (பவானி)**
ஆஸ்பத்திரி முன் லேன்,
வட்டுவினி பிள்ளையாரடி,
இணுவில்.

05029

12-05-1987 செவ்வாய்க்கிழமை

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

ஆகாயப் பிரசுரத்தின் எச்சரிக்கை இது:

# யுத்தம் ஓயும்வரை தமிழர் வாழ்வும் பொருளும் அழியும்!

"யுத்தங்கள் ஓயும் வரையும் உங்கள் வாழ்வும், உடைமைகளும், பொருட்களும் சேதமாக்கப்படலாம்" இப்படி தமிழ் மக்களை எச்சரிக்கும் 'ஆகாய பிரசுரங்கள்' நேற்று நகரின் பல பகுதிகளிலும் ஹெலிகப்டரிலிருந்து வீசப்பட்டன.

'பயங்கரவாத முகாம்கள் இருக்கும் இடங்களை விட்டு வெளியேறுங்கள். கடந்த சில தினங்களில் இந்த முகாம்கள் படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகின. பயங்கரவாதிகள் தமதுபோரை நிறுத்திப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்வரும் வரையில் இநதத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கும்' எனவும் இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாண மக்களே' என்னும் தலைப்பைக்கொண்ட இப் பிரசுரம் வழமையான அளவை விட சிறிய அளவினை உடைய தாகக் காணப்பட்டது.

## காமினி திஸநாயக்கா அறிவிப்பு

## தீவிரவாதிகள் எதிர்ப்பினும் மாகாணசபை அமுலாகும்

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சு நடாத்தித் தீர்வு ஒன்றினைக் காண தீவிரவாதிகள் முன்வராவிட்டாலும், மாகாணங்களுக்கான அதிகார பரவலாக்கல் மசோதாவை நிறைவேற்றி அமுல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயக்கா சென்னையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாகாணங்களுக்கும் பிற மாகாணங்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் நகல் மசோதா தற்போது தயார் நிலையில் இருப்பதாகச் சொன்ன அமைச்சர் இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க அரசு மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் அதற்கான முயற்சிகள் விரைவில் ஆரம்பிககப்படும் எனவும் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதென்ற தீர்மானத்தில் மாற்றமில்லை அரசு நினைத்தால் மீண்டும் யாழ்நகரைக் கைப்பற்றுவது பிரச்சினைக்குரிய விடயமுமில்லை. ஆனல் அப்பாவி மக்களும் அவர்களது உடைமைகளும் வீணகப் பாதிக்கப்படக்கூடாது என்பதினலேயே படையினர் பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றனர்" எனவும் அமைச்சர் காமினி தெரிவித்தார்

## ஸ்ரான்லி கல்லூரிக்கு மத்திய கல்லூரியும் இந்துமகளிருக்கு வேம்படியும் இடம் மாறும்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரண்டையும் தற்காலிகமாக வேறு பாடசாலைகளுக்கு இடம் மாற்றுவதற்கான அனுமதியை கல்வி அமைச்சின் செயலாளர் யாழ். கல்விப்பணிப்பாளருக்கு வழங்கியுள்ளார்.

இதன் படி மத்திய கல்லூரியை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் [ஸ்ரான்லி கல்லூரி] வேம்படி மகளிர் கல்லூரியை யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் இடம் மாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் இது பற்றிய இறுதி முடிவை எடுக்கும் பொறுப்பு குறித்த இரு பாடசாலைகளினதும் பெற்ரோர் அபிவிருத்திச் சங்கத்தினதும், கல்லூரி அதிபர்களினதும் விருப்பத்தைப் பொறுத்தது என யாழ். கல்விப்பணிப்பாளர் ஜனுப். எம். எம். மன்சூர் நேற்று முரசொலிக்குத் தெரிவித்தார்.

இது சம்பந்தமான முடிவெடுக்கும் ஆலோசனைக் கூட்டங்கள் இவ்வார இறுதிக்குள் இரு கல்லூரிகளிலும் தனித்தனியாக நடைபெறவுள்ளன. அக்கூட்டத்தில் பெற்ரோரால் எடுக்கப்படும் முடிவுகளுக்கமைய கல்லூரிகள் அதே கட்டடத்தில் தொடர்ந்து இயங்குவதா அல்லது மேற்குறித்த இரு பாடசாலைக் கட்டடங்களுக்கும் மாற்றுவதா என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். மத்திய கல்லூரியும், வேம்படி மகளிர் கல்லூரியும் முறையே கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், இந்து மகளிர் கல்லூரி கட்டடங்களுக்கு மாற்றப்படும் பட்சத்தில் அங்கு காலையில குறித்த இரு பாடசாலைகளினதும் வகுப்புக்களும் பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை. மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி வகுப்புக்களும் தனித் தனியாக நடாத்தப்படும்.

### மரணமானவர்கள்..

யாத நிலையில் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் பெண்கள் உட்பட பதினைந்துபேர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் இவர்கள் விபரம் வருமாறு:-

பி கமலாதேவி [38] மாவடி, வட்டுக்கோட்டை; எஸ். ராசாத்தி [45] முத்தமிழ்வீதி, கொட்டடி; மொகமட் சவ்மா [25] முஸ்லிம் தெரு; தேன்மொழி [20] அரியாலை; எஸ். நல்லதம்பி [65] மாவிட்டபுரம்; பகிரதன் [15] அச்சுவேலி; பவ்ஸி [22] மண்டைதீவு; வேலாயுதம் [70] யாழ்ப்பாணம்; எம். நூன் [26] முஸ்லிம் தெரு; குமார் [16] குருநகர்.

### ராணுவத்துள்...

பினர்கள் ராணுவத்தில் சேர்ந்துள்ளது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எமது
வாடிக்கையாளர்களுக்கு நற்செய்தி

மீண்டும் எமது ஸ்தாபனம் வழமைபோல் இயங்குகின்றது உங்களின் சகல தேவைக்கான ஐவுளிவகைகளையும், பட்டுப்பிடவை வகைகளையும் எம்மிடம் சிரமமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

ராஜ்கோபால்ஸ்
05037
47, பெரியகடை - யாழ்ப்பாணம்.

## சிவா வீரமரணம்

நேற்று மாலை யாழ்நகரில் இடம்பெற்ற விமானத் தாக்குதலை முறியடிக்கப் போராடி மரணமடைந்த விடுதலைப்புலிகளின் போராளியான ஹட்டனைச் சேர்ந்த சிவானந்தனுக்கு (சிவா) விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### யாழ்நகரில்..

சேதமடைந்தன. 'முருக விலாஸ்' என்ற தேநீர்க்கடையொன்றும் பலத்த சேதமடைந்துள்ளது. இப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த 'தீசன்ஸ்' நிறுவனத்திற்குச் சொந்தமான 29 ஸ்ரீ 9935 இலக்கமுடைய லொறி ஒன்றும் பலத்த சேதமடைந்தது. லொறியின் சாரதி படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீராவியடியிலுள்ள கடைச் சுவாமி வீதியில் மேற்கொள்ளப்பட்ட பொம்பர் தாக்குதல்களில் இரண்டு வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகின. வீட்டிலிருந்தவர்கள் அனைவரும் பதுங்கு குழிக்குள் இருந்ததால் உயிராபத்து எதுவுமின்றித் தப்பித்துக்கொண்டார்கள்.

ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீடொன்று சிறிது சேதமடைந்ததுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த காரும் பலத்த சேதத்துக்குள்ளானது.

ஹெலிகாப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி வேட்டுக்களால் மனோகரா தியேட்டர் சந்திக்கு அண்மையில் சென்றுகொண்டிருந்த ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். ஹோட்டல் அசோக், பிரதான வீதி சந்தியிலுள்ள வாடிவீடு ஆகியன ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களால் சிறிது சேதமடைந்தன.

பொம்பர்கள், ஹெலிகாப்டர்கள், சீ பிளேன் ஆகியவற்றின் மீது போராளிகளும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

## நள்ளிரவில் ஷெல் தாக்குதல்

(அச்சுவேலி)

வயாவிளான் மினி முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகாலை வரையும் அச்சுவேலிப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக விட்டுவிட்டு ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை கொலனி, அச்சுவேலி மகாவித்தியாலய பின் பகுதி, அச்சுவேலி - வயாவிளான் வீதிச் சந்தியிலுள்ள மருத்துவமனை, அச்சுவேலி தென் பகுதி ஆகிய இடங்களில் இந்த ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

வெடித்த ஷெல் துண்டுகளில் SR - POT - 7/70119B, U 81 என்ற இலக்கங்கள் காணப்படுகின்றன. சில வீடுகளின் சுவர்கள், தென்னை மரங்கள் என்பனவும் சேதமடைந்துள்ளன. இதனல் ஒரு இளம் பெண் படுகாயமடைந்தார்.

### பேச்சு நடத்த - - -

பேசும் நிலைக்கும் தள்ளியது.

நாம் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை ஆலோசனைகளை நடாத்திக்கொண்டிருந்த சமயம் யாழ். நகர்ப்புறத்தில் அப்பாவிமக்களின் குடியிருப்புகளின்மீது பொம்பர்தாக்குதல்கள் இடம் பெற்றுக்கொண்டிருந்தன.

தமிழ் மக்களின் கடந்த கால வரலாறு முதல் இன்றுவரை சிறிலங்கா அரசு எதுவித நம்பிக்கைக்குரிய விதமாகவும் செயற்பட்டதேயில்லை. இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த கணத்தில் கூட யாழ். ஆஸ்பத்திரியை சுற்றி பொம்பர் தாக்குதல்கள் இடம்பெற்றவண்ணமிருந்தன.

### போராளிகள்...

தார்.

விடுதலைப் புலிகளால் பண்ணை பொலிஸ் விடுதித் தாக்குதலின்போது சிறைபிடிக்கப்பட்ட எட்டுச் சிப்பாய்களுக்கு மாற்ருக இருபத்தைந்து போராளிகளையும் ஆதரவாளர்களையும் விடுவிக்க முடியாதென இங்கு பேசிய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

யாழ். மாநகரசபைப் பகுதியைச் சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவதைப் போராளிகள் ஏற்காவிட்டால் யாழ். வைத்தியசாலையை இடமாற்றம் செய்யும் தீர்மானத்தைத் தாம் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை எனவும் அமைச்சர் அத்துலத்முதலி இங்கு தெரிவித்ததாகவும் அறியவந்துள்ளது:

### திவுலுப்பிட்டி----..

ஹெலிகப்டர்கள் அப்பகுதியை வட்டமிட்டுச் சோதனையிட்டபோது, கொள்ளையர்கள் பாவித்த ஹைஏஸ் வான் அநாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பது இன்னும் கணக்கிடப்படவில்லை. இச் சம்பவத்தையடுத்து இப் பகுதி வங்கிகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கமாண்டோவில் 6 பேர் மரணம்

நேற்றுக் காலை ஏழு வூரில் இருந்து வந்தாறுமூலைக்கு நடைபவனியாக வந்துகொண்டிருந்த கமாண்டோக்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணிவெடித்தாக்குதலின்போது ஆறு கமாண்டோக்கள் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பலத்த சேதம்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மீது நேற்று பகல் ஹெலிகப்டரிலிருந்து ஒரு மணி நேரமாக பலத்த தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது இதனல் கட்டடம் சேதமடைந்தது. மாணவர் மயிரிழையில் உயிர்தப்பினர்.

### 194 பிரமாவட்ட..

றம் கிடைக்கப் பெற்றுள்ள ஆசிரியர்கள் அதற்கான இடமாற்ற அனுமதிக் கடிதத்தினை 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கல்வித்திணைக்களத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்துள்ள ஆசிரியர்களின் தொகை மாவட்ட ரீதியில் வருமாறு:- கிளிநொச்சி - 36, மன்னூர் - 7, வவுனியா - 37, முல்லைத்தீவு - 38, திருமலை - 18, கல்முனை - 4, மட்டுநகர் - 5, அனுராதபுரம் - 3, புத்தளம் - 2, சிலாபம் - 2, இரத்தினபுரி - 6, பண்டாரவளை - 4, கேகாலை - 4, மாத்தளை - 3, கண்டி - 7, நுவரெலியா - 13, கொழும்பு - 2, ஹோமாகம - 1, கம்பஹா - 2.

யாழ் மாவட்டத்திற்கு உள்ளேயான இடமாற்றப்பட்டியல் ஜூன் முதலாம் திகதியளவில் வெளியிடப்படும் என யாழ். கல்விப்பணிப்பாளர் ஜனுப். எம் எம். மன்சூர் நேற்று முரசொலிக்குத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62 ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப்பிரிவில் 12-05-87 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது